# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2356/29 - 2023 නොවැම්බර් මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.11.02

*2356/29 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

ச. அ. இல. : பிஎஸ்/சீஎஸ்ஏ/00/4/7/1

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மாண்புமிகு சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களினால்**

(முத்திரை)

**ரணில் விக்கிரமசிங்க**

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசத் ஜெரார்ட் டெப் அவர்கள்
சுந்தரம் அருமைநாயகம் அவர்கள்
சேனாநாயக்க அலிசெண்ட்ரலாகே அவர்கள்
சனாதிபதி சட்டத்தரணி நலின் ஜயந்த அபேசேகர அவர்கள்
ரஜித நவீன் கிரிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா அவர்கள்
அஹமட் லெப்பே மொஹமட் சலிம் அவர்கள்
சாகரிகா தெல்கொட அவர்கள்
எஸ்தர் சிறியானி நிமல்கா பிரணாந்து அவர்கள்
விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ அவர்கள்

ஆகியோருக்கு,

வாழ்த்துக்கள்!


1A - G 40656 — 361 (2023/11)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய என்னால், 2023 ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதிய ஆணைப்பத்திரத்தின் மூலம் நடைமுறையிலுள்ள தேர்தல் சட்டங்களை பரிசீலனைசெய்து தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளை சமர்ப்பித்தல், அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களினால் முறையாக ஊடகத்தினைப் பயன்படுத்த வேண்டிய முறைகள் பற்றிய ஊடக வழிகாட்டல்களைத் தயாரித்தல் தொடர்பான பரிந்துரைகளை முன்வைத்தல், அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் அவற்றின் அங்கத்தவர்கள் அரசியல் மற்றும் பொதுப்பணிகளை நிறைவேற்றும் போது நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிய ஒழுக்க நெறிமுறையை அறிமுகப்படுத்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல், அரசியல் கட்சிகளை பதிவுசெய்தல் மற்றும் நம்பகத் தன்மையுடனும் பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறும் வகையிலும் அவற்றிற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான சட்டதிட்டங்களை வலுவாக்குதல் தொடர்பில் பரிந்துரைகளை சமர்ப்பித்தல் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல், விசாரணைகள் மற்றும் பரிசீலனைகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்கான ஆணைக்குழுவிற்கு நீங்கள் அனைவரும் நியமிக்கப்பட்டுள்ளீர்கள் என்ற காரணத்தினாலும்;*

*மேலும், மக்களின் அரசியல் கருத்துக்களை உருவாக்குவதில் பங்கேற்பதன் மூலம் பல கட்சி சனநாயகத்தில் குடிமக்களுக்கும் அரசுக்கும் இடையிலான இடைநிலை வகிபாகத்தை அரசியல் கட்சிகள் நிறைவேற்றுவதனால், பலகட்சி சனநாயகம் பாராளுமன்ற சனநாயகத்திற்கான ஒரு முக்கிய உட்கட்டமைப்பாக விளங்குவதனாலும்;*

*மேலும், 1978 ஆம் ஆண்டின் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளவாறு மக்களின் வாக்குரிமையைப் பயன்படுத்துவதற்கு நம்பகமான அரசியல் கட்சிகளின் தேவைப்பாடுகள் இருக்கின்றபடியாலும்;*

*மேலும், தேர்தல்கள் உள்ளிட்ட தேர்தல் பிரச்சாரங்களில் நிதிச் செலவுகளின் துரித அதிகரிப்பானது அரசியலில் பணத்தின் பங்கு மற்றும் கொள்கை கைப்பற்றுதல் மீதான சாத்தியக்கூறுகள் மீதும் கவனம் அதிகரித்து வருகின்றபடியாலும்;*

*மேலும், குற்றச்செயல்களுடன் தொடர்புடையோர் அரசியல் கட்சிகளுக்குள் உள்நுழைவது குறித்த சாத்தியக்கூறுகள் அதிகரித்துள்ளதன் காரணத்தினாலும்;*

*மேலும், நிலையான அரசியல் கட்சிகளுக்குப் பதிலாக அரசியல் ஸ்தீரமின்மைக்கு வழிவகுக்கும் குறுகிய கால அரசியல் முன்னணிகளாக மாற்றமடைகின்ற காரணத்தினாலும்;*

*மேலும், இலங்கையில் வாக்காளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் இடையில் பரஸ்பர நம்பிக்கையை நிலைநிறுத்துவதும் பேணுவதும் எப்போதும் முக்கிய தேவையொன்றாக இருக்கின்றபடியாலும்;*

*மேலும், ஏனைய நாடுகளின் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளைக் கருத்திற்கொண்டு, அரசியல் கட்சிகளை அங்கீகரிப்பது மற்றும் இரத்துச் செய்வதற்கான சட்ட அளவுகோல்களை நிறுவுவது உட்பட, வாக்காளர்களுக்கு அரசியல் கட்சிகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புணர்வை உறுதிப்படுத்தவும், அதன் மூலம் மக்கள் நம்பிக்கையை மீளக்கட்டியெழுப்பவும் சீர்திருத்தங்கள் தேவைப்படுகின்ற காரணத்தினாலும்;*

*மேலும், பாராளுமன்றங்களுக்கிடையிலான ஒன்றியம் உட்பட உலகளாவிய ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பல அமைப்புகளினால் அரசியல் கட்சிகளின் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அளவுகோல்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளபடியாலும்;*

*மேலும், 2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 16 ஆந் திகதி 2354/06 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், ஆணைப்பத்திரம் மூலம் நியமிக்கப்பட்ட மேற்குறித்த ஆணைக்குழுவின் விடயப்பரப்பினை மேலும் விரிவுபடுத்த வேண்டுமென்று நான் கருதுவதாலும்;*

*மேலும், இந்த ஆணைக்குழுவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள பணிகளின் அதிகரிப்புடன் அப்பணிகளை மிக விரைவாகவும் வினைத்திறனுடனும் நிறைவேற்றுவதற்காக தற்போது பதவி வகிக்கும் ஆணையாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையென்பது என்னால் கண்டறியப்பட்டுள்ளதாலும்;*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் அலென் காமையிகல் வீர் டேவிட் அவர்கள், தங்களின் விவேகம், திறமை மற்றும் பற்றுறுதி என்பவற்றின் மீது மிகுந்த பக்தியும் நம்பிக்கையும் வைத்து, மேற்குறிப்பிடப்பட்ட ஆணைப்பத்திரத்தின் பிரகாரம் நிறுவப்பட்ட விசாரணை ஆணைக்குழுவின் ஆணையாளரொருவராக இத்தால் நியமிக்கின்றேன்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகிய நான், திருத்தப்பட்ட 1948 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க விசாரணை ஆணைக்குழுச் சட்டத்தின் 2 ஆவது மற்றும் 3 ஆவது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நியமிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட ஆணைக்குழுவின் ஆணையாளர்களான மேற்சொல்லப்பட்ட,

1. ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் சனாதிபதி சட்டத்தரணி கௌரவ வெவகே பிரியசாத் ஜெரார்ட் டெப் அவர்கள்
2. சுந்தரம் அருமைநாயகம் அவர்கள்
3. சேனாநாயக்க அலிசெண்ட்ரலாகே அவர்கள்
4. சனாதிபதி சட்டத்தரணி நலின் ஜயந்த அபேசேகர அவர்கள்
5. ரஜித நவீன் கிரிஸ்டோபர் சேனாரத்ன பெரேரா அவர்கள்
6. அஹமட் லெப்பே மொஹமட் சலிம் அவர்கள்
7. சாகரிகா தெல்கொட அவர்கள்
8. எஸ்தர் சிறியானி நிமல்கா பிரணாந்து அவர்கள்
9. விதாரணகே தீபானி சமந்த ரொட்ரிகோ அவர்கள்
10. அலென் காமையிகல் வீர் டேவிட் அவர்கள்

ஆகிய உங்கள் அனைவருக்கும் பின்வரும் விடயங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்று சமர்ப்பிப்பதற்கும், விசாரணை மற்றும் ஆய்வுகளை மேற்கொண்டு அறிக்கையிடுவதற்காக இத்தால் கட்டளையிடுகின்றேன்.

குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் என்னவெனில்;

01. நடைமுறையில் உள்ள அனைத்து தேர்தல் சட்டங்கள் தொடர்பாகவும் பரிசோதித்து பின்வரும் விடயங்கள் தொடர்பாகவும் விசேட கவனம் செலுத்தி நடைமுறைத் தேவைப்பாடுகளுக்கு ஏற்புடையவாறு தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்குத் தேவையான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

    i. பெண்கள் மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தை அதிகரித்தல்.

    ii. தேர்தல் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து குறித்த தேர்தலை நடாத்தி முடிவுகள் வெளியிடப்படும் திகதி வரையான கால அளவினை குறைத்தல்.

    iii. வாக்களிக்கும் போது அச்சிடப்பட்ட வாக்குச்சீட்டைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இலத்திரனியல் வாக்களிப்புக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

    iv. வெளிநாட்டில் உள்ள இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

    v. ஒரே நபருக்கு மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கான மாகாணசபை மற்றும் பாராளுமன்ற தேர்தல்களில் போட்டியிடுவதற்கும், மற்றும் தெரிவுசெய்யப்படுமிடத்து ஒரே தடவையில் மாகாணசபை மற்றும் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குதல். (உதா: பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள நபர் ஒருவருக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கி அதிலும் தெரிவுசெய்யப்படுமிடத்து ஒரே தடவையில் மாகாணசபை மற்றும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்).

    vi. தேர்தல் தினத்தன்று தேர்தல் பணிகளுக்கான சேவைகளை வழங்கும் அரச கூட்டுத்தாபனங்கள்/ அரச தொழில்முயற்சிகள்/ தனியார் துறையில் கடமை புரியும் வாக்காளர்களுக்கும் தபால் மூலம் வாக்களிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குதல்.

    vii. மக்கள் பிரதிநிதிகளை தெரிவுசெய்தல் தொடர்பில் விகிதாசார பிரதிநிதித்துவ முறைக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படாது பல்சமூக தன்மையினையும் கவனத்திற்கொண்டு பல்சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தனிஅங்கத்துவ முறை கலக்கப்பட்ட பொருத்தமான முறை ஒன்றை தயாரித்தல்.

02. அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்களால் முறையாக ஊடகங்கள் பயன்படுத்தப்பட வேண்டிய விதம் பற்றிய ஊடக வழிகாட்டல்களைத் தயாரித்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

03. அரசியல் கட்சிகள், சுயேட்சைக் குழுக்கள் மற்றும் அவர்களின் பங்களிப்பு அரசியல் மற்றும் பொதுப் பணிகளை நிறைவேற்றும் போது நடந்துகொள்ள வேண்டிய விதம் பற்றிய ஒழுக்க நெறிமுறையை அறிமுகப்படுத்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

04. அரசியல் கட்சிகளைப் பதிவுசெய்தல் மற்றும் நம்பகத் தன்மையுடனும் மக்களுக்குப் பொறுப்புக் கூறும் வகையிலும் அவற்றின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பற்றிய சட்டங்களைப் பலப்படுத்தல் தொடர்பில் பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்.

05. சட்டவாக்கங்களை முன்மொழிதல் உட்பட பின்வரும் விடயங்கள் தொடர்பான பரிந்துரைகளைச் சமர்ப்பித்தல்

i. ஏனைய பல்கட்சி சனநாயக அரசுகளுக்கு ஒத்ததாக மற்றும் உறுதியான அரசியல் கட்சிகளின் அடிப்படையில் இலங்கையின் பல்கட்சி முறையை பலப்படுத்தல்

ii. அரசியலில் பணத்தின் பங்கு மற்றும் கொள்கைக் கைப்பற்றுதலைத் தடுத்தல் அத்துடன் அரசியல் கட்சிகளுக்கு பொது நிதியினை வழங்குதல்.

iii. அரசியல் கட்சிகளின் உறுப்பினர்களுக்கு தலைமைத்துவம் பொறுப்புக்கூறவேண்டியமை

iv. தேர்தல் பிரசாரங்கள் தொடர்பில் மேற்கொள்ளும் செலவினங்களைக் குறைத்தல்

v. சகல மக்கள் பிரிவினர்களிடையே ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தி தேசிய ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கான அரசியல் கட்சிகளின் வகிபாகம்

vi. பின்வருவனவற்றைக் குறிக்கோள்களாகக் கொண்டமைந்த, கொள்கை அடிப்படையிலான அரசியல் கட்சிகளை மேம்படுத்தல்

அ. இலங்கையின் இறையாண்மை மற்றும் சுயாதீனத்தைப் பாதுகாத்தல்,

ஆ. அரசியல் மற்றும் பொருளாதார உறுதிப்பாடு

இ. இலங்கையர் என்ற அடையாளம் அத்துடன்

ஈ. அபிவிருத்தியடைந்த பொருளாதாரமொன்றாக மாற்றியமைப்பதன் மூலம் மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துதல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு இலச்சினையின் கீழ் இரண்டாயிரத்து இருபத்துமூன்றாம் ஆண்டு நவெம்பர் மாதம் 02 ஆந் திகதி கொழும்பில் வழங்கப்பட்டது.

மாண்புமிகு சனாதிபதியவர்களின் ஆணைப்படி,

**ஈ. எம். எஸ். பீ. ஏக்கநாயக்க,**
சனாதிபதியின் செயலாளர்.

EOG 11-0026

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.